

சென்னை கலைவாணர் அரங்கக் கூட்டரங்கில் நேற்று (24.10.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் செய்தித் துறையில், பணிகாலத்தில் மறைந்த பணியாளர்களின் 2 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) மு.பெ.அன்புசோழன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் (செய்தி) ச.செல்வராஜ் ஆகியோர் உள்ளார்கள்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை! அமைச்சர் க.பொன்முடி எழுதிய

# ‘திராவிட இயக்கமும் கருப்பர் இயக்கமும்’ நூல்! முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிடுகிறார்!

### ஆசிரியர் கி.வீரமணி பெற்றுக் கொள்கிறார்! அமைச்சர் துரைமுருகன் தலைமை!

சென்னை, அக்.25-

தி.மு.கழக துணைப் பொதுச் செயலாளர் - வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி எழுதிய ‘திராவிட இயக்கமும் கருப்பர் இயக்கமும்’ நூல் வெளியீட்டு விழா இன்று(25.10.2024-வெள்ளிக் கிழமை) மாலை 6 மணியளவில், அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.

இந்நூல் வெளியீட்டு விழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார்.

கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் விழாவிற்கு தலைமை வகிக்கிறார்.

இந்நூலை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு சிறப்புரையாற்றுகிறார்.

திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் நூலை பெற்றுக் கொள்கிறார்.

கழக துணைப் பொதுச் செயலாளர் - வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.

வீ.எம்.எஸ். சுபகுண ராஜனின் ‘கயல் கவின்’ பதிப்பகம் வெளியிடும் இந்நூலை தமிழில் அசதா மொழி பெயர்த்துள்ளார்.

இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள் - கழக முன்னணியினர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

### திருப்பத்தூரில் மாமன்னர் மருதுபாண்டியர்

# 223-வது ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

### திருவுருவச் சிலைகளுக்கு – அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் – தங்கம் தென்னரசு – கே.ஆர்.பெரிய கருப்பன் - ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் – எஸ்.ரகுபதி – டி.ஆர்.பி.ராஜா – பி. மூர்த்தி மரியாதை!

சிவகங்கை, அக்.25-

சிவகங்கை மாவட்டம் சிவகங்கையை தலைநகராக கொண்டு ஆட்சி நடத்திய வர்கள் மாமன்னர் மருது பாண்டியர்கள். நாட்டின் சுதந்திரத்திற் காக ஆங்கிலேயர்களை எதிர்த்து முதலில் போராடியவர்கள். இறுதியில் மருதுபாண்டியர்கள் சரணடையா விட்டால் மாமன்னர்க ளால் காளையார் கோவிலில் கட்டப்பட்ட ராஜகோபுரத்தை பீரங்கியால் தகர்ப்பதாக அறிவித்தார்கள். இதை கேள்விப்பட்ட மருது பாண்டியர்கள் திருப்ப த்தூரில் சரண் அடைந்தபோது 1821ம்ஆண்டு அக்டோபர்24ம்தேதி தூக்கிலிடப் பட்டார்கள்.மருதுபாணடியர்களின் வீரத்தினை போற்றி பாராட்டும் வகையில் முதல்வராக இருந்த கலைஞர் மாமன்னர் மருது பாண்டியர்களுக்கு நினைவு மண்ட பம் மற்றும் திருவுருவச் சிலையினை அமைத்தார். மேலும் அரசின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 24 ஆம் தேதிஅரசின் சார்பில் மரியாதை செலுத்தப்படும் என்று ஆணை பிறப்பித்தார். அதன்படி ஒவ்வொரு ஆண்டும் அரசின் சார்பில்மரியாதைசெலுத்தப்பட்டு வருகிறது

இந்த ஆண்டு 223 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று 24 ம் தேதி திருப்பத்தூரில் உள்ள மாமன்னர் மருதுபாண்டியர்கள் நினைவிடத்தில் உள்ள பெரிய மருது சின்ன மருது ஆகியோரின் திருவுருவச் சிலைக்கு அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் எஸ்.ரகுபதி, ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், டி.ஆர்.பி.ராஜா, தங்கம் தென்னரசு, பி.மூர்த்தி ஆகியோர் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசிரவிக்குமார், எஸ்.மாங்குடி, முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டோங்கரே பிரவீன் உமேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.செல்வசுரபி ஆகியோர் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். தொடர்ந்து மருது பாண்டியர்கள் தூக்கிலிடப்பட்ட இடத்தில் அமைச்சர்கள் மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் மாவட்ட துணை செயலாளர் த.சேங்கை மாறன், நகர் கழக செயலாளர்கள் சி.எம். துரை.ஆனந்த், க.பொன்னுச் சாமி, என். குணசேகரன், மேயர் எஸ்.முத்துதுரை பேரூர் கழக செயலாளர்கள் ஆர். கார்த்திகேயன், கதிர்வேல், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார் மாவட்ட மகளீரணி அமைப்பாளர் திருமதி பவானிகணேசன், மாவட்ட மகளீர் தொண்டரணி துணை அமைப்பாளர் திலகவதி கண்ணன்,மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் வல்லபாய், மாவட்ட சிறுபான்மை நல அமைப்பாளர் என்.எம்.சாக்ளா, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன், ஒன்றிய கழகச் செயலாளர் கள் எஸ் .சண்முக வடிவேல்,எம். ஜெயராமன், திருமலை முத்து ராமலிங்கம் ,பூமணி ,கே. பாலசுப்பிரமணியன், எம்.அண்ணாதுரை, பொதுக்குழு உறுப்பினர்கள் எம் .சோமசுந்த ரம், பி .ஆர். பெருமாள், அம்பலமுத்து , சேவியர், புதூர் கண்ணன், ஒன்றிய பொருளாளர் ஏ.எம் .கண்ணன் மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் பூக்கடை பாண்டி இளைஞரணி மனோகரன், ஒன்றிய துணைசெயலாளர் முத்துகுமார் பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி கோகிலராணிநாராயணன் சிவபுரி சேகர் உட்பட மாவட்டம் முழுவதிலும் இருந்து ஏராளமானகழகத்தினர் கலந்து கொண்டார்கள் .முன்னதாக மருது பாண்டியர் வாரிசுதாரர் களின் சார்பில் ராமசாமி சாத்தையா மற்றும் உறவினர்கள் அமைச்சர்களுக்கு சால்வை அணிவித்து வரவேற்றார்கள். முன்னதாக மருதுபாண்டியர் வாரிசுதாரர்கள் ராமசாமி சாத்தையா மற்றும் அவர்கள் குடும்பத்தினர் கள் உறவினர்கள் பொங்கல் வைத்து வழிபட்டார்கள்

ம.தி.மு.க. சார்பில் பூமிநாதன் எம்.எல்.ஏ. மாவட்ட செயலாளர் பசும்பொன் மனோகரன் இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பில் முன்னாள் எம்.எல்.ஏ எஸ்.குணசேகரன் பி.எல். ராமச்சந்திரன் மற்றும்

பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள், சமுதாய தலைவர்கள் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் கள். மாவட்ட காவல் கண்காணிப் பாளர் பிரவீன்டோங்கரேஉமேஷ் தலைமையில் போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. தொடர்ந்து மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் பூக்கடை பாண்டி ஏற்பாட்டின் பேரில் அன்னதானத்தை கூட்டுறவுத். துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கிவைத்தார்.

### நெல்லை மத்திய மாவட்டம் – மானூர் கிழக்கு ஒன்றியம் –

# தாழையூத்தில் அ.தி.மு.க.வினர் கழகத்தில் இணைந்தனர்!

### மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் முன்னிலையில்!

நெல்லை.அக்.25-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையை ஏற்றும்

திராவிட மாடல் ஆட்சியின் செயல்பாடுகளையும், சிறப்பான நிர்வாகத்தையும் கருத்தில் கொண்டும்,கழக இளைஞர் அணி செயலாளரும்,துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் செயல் திறமைகளையும்

மனதார ஏற்றுக் கொண்டு நெல்லை மத்திய மாவட்டம் மானூர் கிழக்கு ஒன்றிய தாழையூத்து ஊராட்சியில் நடைபெற்ற கழக நிகழ்ச்சியில் அ.தி.மு.க.வினர் 5 பேர்கள் அக்கட்சியில் இருந்து விலகி நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

நெல்லை மத்திய மாவட்டம் தாழையூத்து ஊராட்சி மன்றத்தில் கழக நிகழ்வு நடைபெற்றது. அப்போது ஊராட்சி மன்ற தலைவர் பீர் முஹம்மது தலைமையில் ஊராட்சி மன்ற அ.தி.மு.க. உறுப்பினர்கள் சீதா லெட்சுமி, இசக்கிராணி, சாரதா,முத்துகுமார், நாகராஜன் ஆகியோர் அக்கட்சியிலிருந்து விலகி நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் முன்னிலை யில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

நிகழ்வில் மாநில மகளிர் தொண்டர் அணி துணை செயலாளரும், கிறிஸ்துவ நல வாரிய தலைவரு மான விஜிலா சத்யானந்த்,மாநகர துணை மேயர் கே.ஆர். ராஜீ,மானூர் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்பழகன்,மானூர் ஊராட்சி ஒன்றியகுழு தலைவர் ஸ்ரீலேகா அன்பழகன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் லி.மீரான் மைதீன்,மாவட்ட ஆதி திராவிட நல குழு அணி அமைப்பாளர் நவநீதன், தாழையூத்து கிளை செயலாளர் முஜபூர் ரகுமான்,ராமநாதன், முகம்மது நிஜாம்,கே. பெருமாள் , முத்துச்சாமி, காட்டுபாவா,இசக்கி பாண்டியன்,சந்துரு,ராமலட்சுமி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் பேச்சியம்மாள்,சரஸ்வதி,அப்துல் தானிஷ்,முகம்மது சித்திக் பாத்திமா, நாகராஜன்,மாரீஸ்வரி, வள்ளி உள்பட கழகத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு கொடுக்கிறது! வட நாடு கெடுக்கிறது!



அறிஞர் அண்ணாவின் சொல்லாடல் நினைவுக்கு வருகிறதா! "வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது" என்ற அண்ணாவின் முழக்கம் கேட்டு வட நாட்டு அரசியல் தலைவர்கள் அதிர்ந்தனர் . ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறவில்லை. இன்றும் அதானிகளும் அம்பானிகளும் நரேந்திரர், அமீத் ஷா ஆதரவினால் வாங்காத துறைமுகங்கள் இல்லை. வளைக்காத தொழில்கள் இல்லை. செய்து வரும் மோசடிகளுக்கும் அளவே இல்லை. 1967 ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா ஆட்சி செய்த போது சேலம் உருக்காலை போன்ற ஒன்றிய அரசின் பொதுத்துறை முதலீடுகள் தேவை என்று ஒன்றிய அரசிற்கு எதிராக 'எழுச்சி நாள்' களம் அமைத்தார்.

196 7அறிஞர் அண்ணா உரிமைகளை மட்டும் கோரவில்லை. ஆட்சிப் பொறுப்பை அளித்த ஏழை எளிய மக்களின் உணவு, கல்வி வாழ்வாதார உரிமைகளை நிறைவேற்றினார். ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரசியை மக்களுக்கு வழங்கிய பின்னர் தான் அமைச்சர்கள் தங்களின் மாத ஊதியத்தைப் பெற்றார்கள். அறிஞர் அண்ணாவின் இரண்டு ஆண்டுகள் ஆட்சி. முத்தமிழ் அறிஞர் கலைஞரின் ஐந்து முறை ஆட்சிகள். முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் இரண்டு ஆண்டுகள் நிறைவு பெற்ற ஆட்சியில் பல வளர்ச்சித் திட்டங்கள் மானுட முன்னேற்ற நோக்கில் நிறைவேற்றப்பட்டதினால் தான் ஐக்கிய நாடுகளின் மன்றத்தின் வளர்ச்சி அறிக்கைகள் வற்புறுத்தி வருகின்ற குறிக்கோள்கள் தமிழ் நாட்டில் வெற்றி பெற்று வருகின்றன.



பேராசிரியர் **மு. நாகநாதன்**

தமிழ்நாட்டின் சீரான வளர்ச்சியால் ஒன்றிய அரசு விதிக்கும் வரி வருவாய் பெருகி வருகின்றன. ஆனால் என்ன நடக்கிறது? சான்றாக, தமிழ்நாட்டின் 100ரூபாய் அளவிற்கு வரி வருவாயை ஒன்றிய அரசு எடுத்துக் கொண்டு 29 ரூபாயைத் தமிழ்நாட்டின் அரசிற்குத் திரும்ப அளிக்கிறது. மீதம் 71% விழுக்காடு தமிழ்நாட்டின் வரி வருவாய் எங்கே செல்கிறது? பாஜக ஆட்சி செய்யும் உத்திரப் பிரதேசம், மத்திய பிரதேசம், பீகார் போன்ற வட மாநிலங்களுக்கு அளித்து வருகிறார்கள். இப்படிச் சில மாநிலங்களின் வரி வருவாயை வட மாநிலங்களில் குவித்தும் மானுட மேம்பாட்டுக் குறியீடுகளில் அம்மாநி லங்கள் வளர்ந்து வருகின்றனவா? மும்பையிலிருந்து வரும் அரசியல் பொருளாதார வார ஏட்டில் (அக்டோபர் 12- 2024 ) பனாரஸ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் மூன்று ஆசிரியர்கள் (பிரியா பர்ட்டா, சௌமியா பர்ட்டா, வினய் குமார்)இணைந்து, இந்தியாவின் 19 மாநிலங்களின் சுகாதாரத்துறையின் புள்ளி விவரங்களை ஆய்வு செய்து மாநிலங்களுக்கிடையே மருத்துவத் துறையில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் குறிப்பிட்டுள்ளனர்.

தாய் சேய் உடல் நலம், இறப்புகள் அரசின் மருத்துவக் கட்டமைப்பு போன்ற முதன்மையான குறியீடுகளை உட்படுத்தி 19 மாநிலங்களை மூன்று வகையாகப் பிரித்துள்ளனர். இக்குறியீடுகளைக் கொண்டு சுகாதாரக் குறியீடுகளில் அதிகமான, நடுத்தரமான, குறைந்த அளவிலான பாதிப்புகளுக்கு உள்ளான மாநிலங்களின் பட்டியலை வெளியிட்டுள்ளனர். பாஜக ஆதரவோடு முதல்வர் பல்டி குமார் ஆட்சி செய்யும் பீகார் மாநிலம் தான் குழந்தைகள் இறப்பு, வளர்ச்சி அடையாத குள்ளக் குழந்தைகள், இரத்த சோகை, காசநோய் பாதிப்பிற்கு உள்ளானவர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். மத்திய பிரதேசம், சட்டீஸ்கர், உத்திரப் பிரதேசம், ஒடிசா, குஜராத் மாநிலங்களில் பீகாருக்கு அடுத்த நிலையில் உள்ளன ஜார்க்கண்ட், மேற்கு வங்காளம், இராஜஸ்தான், மராட்டியம் , ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகம், இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் நடுத்தரப் பாதிப்பு பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

தாய் சேய் இறப்பு, இரத்தச் சோகை காசநோய் போன்ற பாதிப்புகள் குறைந்த அளவிலான மாநிலங்கள் பட்டியலில் வடமாநிலங்களான அரியானா, பஞ்சாப், உத்தரகாண்டு, தென்னகமாநிலங்களான தமிழ்நாடும் கேரளாவும் உள்ளன.

தமிழ்நாடு மட்டுமே மேற்குறிப்பிட்ட உடல் நலப் பாதிப்புகளில் குறைந்த அளவிலான மாநிலமாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

எல்லாச் சுகாதாரக் குறியீடுகளிலும் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது. (Tamilnadu performs well across all the indicators of health deprivation- page 67 ) ஒன்றிய அரசை ஆட்டிப் படைக்கும் நரேந்திர - அமீத் ஷா பிறந்த மாநிலமான குஜராத்தில் ஆறுமாதம் முதல் 59 மாத வளர்ச்சிப் பருவத்தில் உள்ள குழந்தைகள் மிக அதிகமாக அளவில் இரத்தச் சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர். (Gujarat has the highest percentage of children within the age of 6-59 months having anaemia. page - 67) இந்தக் கட்டுரையை எழுதியவர்கள் மூன்று ஆய்வாளர்களும் நரேந்திரர் நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள பனாரஸ் பல்கலைக்கழகத்தின் பணியாற்றும் ஆசிரியர்கள். தமிழ்நாடுவளர்கிறது. வரிவருவாய் வாரிவழங்குகிறது.

அந்த வரி வருவாயில் தமிழ்நாட்டிற்கு உரிய அளவில் கொடுக்காமல் பெருமளவில் ஒன்றிய அரசு நிதி பகிர்வின் வழியாக வட மாநிலங்களுக்கு வாரிக் கொடுக்கிறது. அள்ளிச்சென்ற இந்த வரி வருவாயைக் கல்வி, சுகாதாரத் துறைகளுக்குப் போதிய அளவில் ஒதுக்கீடு செய்யாமல் வட மாநிலங்களில் வாழும் ஏழை ஒடுக்கப்பட்ட மக்களை ஏமாற்றி வருகிறது. மத இருளில் மக்களை வீழ்த்தி மானுட வளர்ச்சியைத் தடுக்கிறது வடநாடு மக்களைக் கொடுமை செய்கிறது.

### செய்தி மக்கள் தொடர்புத்துறையில்

# கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள்!

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்

சென்னை, அக்.25-

தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தி மக்கள் தொடர்புத்துறையில் கருணை அடிப்படையில் இருவரை அலுவலக உதவியாளர்களாகப் பணி நியமனம் செய்து நியமன ஆணைகளை நேற்று (24.10.2024) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் வழங்கினார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு நிறைவேற்றி வரும் திட்டங்கள், அறிவிப்புகள், அரசின் சாதனைகள், செய்தி வெளியீடுகள், அறிக்கைகள், வேண்டுகோள்கள் அனைத்தும் மக்களை எளிதில் சென்றடையும் வகையில் அரும்பணிகளைத் தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை மிகச் சிறப்பாக நிறைவேற்றி வருகிறது.

தமிழ்நாடு அரசு, தலைமைச் செயலகம், செய்தி மக்கள் தொடர்புத் துறையில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வந்த எஸ்.அன்பழகன் அவர்கள் கடந்த 5.10.2022 அன்று திரு நெல்வேலி அரசுப் பொருட்காட்சியில் பணியிலிருக்கும்போது, இயற்கை எய்தினார். அவருடைய சட்டப்படியான வாரிசுதாரர்களில் ஒருவரான அவரது இளைய சகோதரர் எஸ். குணாநிதி என்பவருக்கு கருணை அடிப்படையில் அலுவலக உதவியாளராக தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் துறை அமைச்சர் நேற்று (24.10.2024) பணி நியமன ஆணையை வழங்கினார்கள். அதே போல, சென்னை இராஜாஜி மண்டபம் (ம) காந்தி மண்டபத்தில் தேர்வு நிலை தோட்டப் பணியாளராகப் பணிபுரிந்து வந்த திருமதி. ஜி.வரலட்சுமி கடந்த 4.1.2024 அன்று இயற்கை எய்தியதால், அவருடைய ஒரே மகனான டி.வி. பரமேஸ்வர ராவ் என்பவருக்கு கருணை அடிப்படையில் அலுவலக உதவியாளர் பணி நியமனம் வழங்கி உரிய நியமன ஆணையை தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை அமைச்சர் நேற்று (24.10.2024) வழங்கினார்கள்.

பணி நியமன ஆணைகளைப் பெற்றுக் கொண்ட இருவரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களுக்கும் தங்களுடைய குடும்பங்களின் சார்பில் மனமார்ந்த நன்றி தெரிவிப்பதாகத் தெரிவித்தனர்.


இந்நிகழ்வின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்தி நாதன், கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) மு.பெ. அன்பு சோழன் மற்றும் கூடுதல் இயக்குநர் (செய்தி) ச.செல்வராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

## தலைமைக் கழக அறிவிப்பு

தேனி தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் **முல்லை க.சேகர் அவர்கள்**, அவர் வகித்து வந்த பொறுப்பிலிருந்து; விடுவிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 23.10.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் செம்மாங்குளம், சர் சி.பி. இராமசாமி ஐயர் நினைவு பூங்கா, அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் மாநகராட்சி அதிகாரிகளுடன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். நாகர்கோவில், அவ்வை சண்முகம் சாலையோரத்தில் உள்ள செம்மாங்குளத்தில் தூர் வாரி தூய்மைப்படுத்தவும், குளத்தை சுற்றியுள்ள பகுதிகளை சீரமைக்கவும் அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார். செம்மாங்குளத்தின் நடுவே ஐலாண்டு அமைத்து அதில் சிற்றுண்டி ஸ்டால் திறப்பது குறித்து மாநகராட்சி அதிகாரிகளிடம் ஆலோசிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து சர் சி.பி.இராமசாமி ஐயர் நினைவு பூங்காவிலுள்ள கழிவுப்பொருட்களை அப்புறப்படுத்தவும், பழுதடைந்துள்ள விளையாட்டு உபகரணங்களை சீரமைக்கவும், பொது மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்யவும் அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார். மேலும் அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் நவீன கழிப்பறை கட்டுமான பணிகளை காலதாமதமின்றி பணி செய்து முடித்திடவும் அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார். ஆய்வில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, வேலாயுதம், ரகுராமன், இ.ஜவஹர், முருகன், பகவதிபெருமாள், செல்வின் ஜார்ஜ், தி.ரோஸிட்டா, ச.அக்ஷயா கண்ணன், மாநகராட்சி அதிகாரிகள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.